ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

2019/2020

# வளர் தமிழ் 4

## பயிற்சி 7

பெயர் ______________________________


*www.readingtamilschool.co.uk*

*admin@readingtamilschool.co.uk*

## 1. பேச்சுப் பயிற்சி



### கரும்பு

- ஆசிய நாடுகளில் கரும்பு அதிகமாகப் பயிரிடப்படுகிறது.
- கரும்பில் செங்கரும்பு, வெண்கரும்பு என இருவகைகள் உள்ளன.
- செங்கரும்பு மிகவும் சுவையுடையது.
- கரும்பு பயிரிடப்படும் இடம் கரும்புத் தோட்டம் எனப்படும்.
- கரும்பு இனிப்புச் சுவையுடையது.
- கரும்பிலிருந்து கருப்பஞ்சாறு எடுப்பர்.



- கருப்பஞ்சாற்றில் இருந்து சக்கரை செய்வார்கள்.
- பொங்கல் விழா அன்று கரும்பு கட்டுவர்.
- கலைமகள் விழாவின்போது முக்கனியுடன் கரும்பையும் படைப்பர்.



- கரும்பு ஆறு அடியிலிருந்து பத்தொன்பது அடி உயரம் வரை வளரும்.
- யானை கரும்பை விரும்பித் தின்னும்.

## 2. வாசித்தல்

ஒரு ஊரின் நடுவே ஆறு ஒன்று இருந்தது. ஆற்றைக் கடப்பதற்கு மிக ஒடுக்கமான ஒரு மரப்பாலம் இருந்தது. அப்பாலத்தில் ஒரு நேரத்தில் ஒருவர் மட்டுமே செல்லமுடியும். ஒருநாள் கறுப்பு ஆடு ஒன்றும் வெள்ளை ஆடு ஒன்றும் எதிரெதிரே வந்து கொண்டிருந்தன. இரண்டும் ஒன்றையொன்று சந்தித்தன. கறுப்பு ஆடு “நான்தான் முதலில் வந்தேன் நீ திரும்பிப் போ” என்றது. வெள்ளை ஆடு அதற்கு மறுத்தது. அதனால் இரண்டிற்கும் இடையே சண்டை ஏற்பட்டது. இரண்டும் கொம்பினால் முட்டிமோதின. அதனால் இரண்டு ஆடுகளும் ஆற்றினுள் விழுந்து இறந்து விட்டன. பின்னர் ஒருநாள் இரண்டு ஆடுகள் பாலத்தில் எதிரெதிரே வந்து கொண்டிருந்தன. இரண்டும் சந்தித்தன. எப்படிப் பாலத்தைக் கடப்பது என்று நினைத்தன. உடனே ஓர் ஆடு படுத்துக் கொண்டது. தன்னைக் கடந்து போகும்படி மற்றைய ஆட்டிடம் கூறியது. அவ்வாறே ஆடு கடந்து சென்றது. பின்னர் மற்றைய ஆடும் எழுந்து பாலத்தைக் கடந்து சென்றது. ஒன்றையொன்று விட்டுக் கொடுத்ததனால் இரண்டு ஆடுகளும் ஆற்றைக் கடந்து சென்றன.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர்தமிழ் 4

.

3. **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுவோம்.**

- கோலாட்டம் ஆடுவோருடைய இருகைகளிலும் _______________ இருக்கும்.
  (சலங்கைகள், கோல்கள், பறைகள்)

- நுணுக்கம் என்ற சொல் குறித்து நிற்பது _______________.
  (கூர்மை, சிறப்பியல்பு, உறவு)

- பழமொழி: பதறாத _______________ சிதறாது.
  (ஓவியம், காரியம், காவியம்)

- அவை எல்லாம் நல்ல நூல்களே. _______________ உனக்குத் தேவையானதை மட்டும் படி.
  (இவற்றுள், அவற்றுள், ஒவ்வொன்றும்)

- ___________________த் தொடங்கிய தூறல் பெருமழையானது.
  (பழகப் பழக, மணி மணியாக, மெல்ல மெல்ல)

- குழந்தை _______________ என நடந்து வந்தது.
  (நறநற, குறுகுறு, சலசல)

- மிருதங்கத்தின் பண்டையப் பெயர் _______________ ஆகும்.
  (உடுக்கு, பறை, தண்ணுமை)

- திருமண விழாக்களில் _______________ கொட்டியது.
  (மணமுரசு, கொடைமுரசு, போர்முரசு)

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

4. **பின்வரும் சொற்களைத் தமிழில் எழுதுவோம்.**

- Tooth ________________________________
- Responsibility ________________________________
- Cheek ________________________________
- Evening ________________________________
- Library ________________________________
- Relatives ________________________________
- Car ________________________________
- Parents ________________________________
- Programmes ________________________________
- Football ________________________________
- Respect ________________________________
- Teach ________________________________
- Picnic ________________________________
- Swimming Pool ________________________________
- Life ________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

5. **மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள சொல்லியமாக எழுதுக.**

- வாசிப்பேன் / பல / நான் / புத்தகங்களை

_______________________________________________

- ஓர் / காட்டுங்கள் / இதைப்போல் / வேறு / எழுதுகோல்

_______________________________________________

- துன்பப்படும்போது / உதவவேண்டும் / பிறர்

_______________________________________________

- அதிகரித்துச் / புவியின் / செல்கிறது / படிப்படியாக / வெப்பம்

_______________________________________________

- தேவையானவற்றைத் / கற்கவேண்டும் / எமக்குத் / தேடிக்

_______________________________________________

றெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

6. **பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

- தோலினால் ஆன இசைக்கருவிகளை எப்படி அழைக்கலாம்?

- ஆடிப்பிறப்பன்று செய்யப்படும் பண்டங்கள் எவை?

- தமிழுக்கு மட்டும் உரிய சிறப்பு எழுத்து எது?

- கூலங்கள் எந்த மாதத்தில் விளைந்து வீடு வந்து சேரும்?

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

7. **உனது நண்பருக்கு 30 சொற்களுக்குக் குறையாமல் ஒரு அஞ்சல் எழுதவும்.**

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4